28.8.18 அ.வ.எண். 133-11 பிவாசா1 - நாகமுத்து

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணத்தின்பேரில் குறுக்கு விசாரணை

தாவா சொத்து கருப்பன் சாம்பானுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணம் எதுவும் இல்லை. தாவா சொத்தின் சர்வே எண்ணை கூற இயலாது. அதன் பரப்பளவு ஒன்னரை ஏக்கர். கருப்பன் சாம்பானுக்கு காந்தி மூத்த மகன். அந்த காந்தியின் மகன் தான் வாதி அய்யாவு என்றால் சரிதான். எங்களுக்கு கிடைத்த 67.5 செண்டிற்கு எல்கை அய்யாவு உழவிற்கு மேற்கே, சகாயம் உழவிற்கு கிழக்கே மற்றும் தெற்கே, கலுவாய், ராசு உழவிற்கும் வடக்கே. என் தகப்பனார் கருப்பான் சாம்பானின் இளைய மகன். காந்தியும் என் அப்பாவும் பாகம்பிரித்துக் கொண்டதற்கு ஆவணம் எதுவும் இல்லை. என் தாத்தா காலத்திலேயே இரண்டு மகன்களுக்கும் பிரித்துக் கொடுத்துவிட்டார். நான் கூறுவது போன்று எந்த பாகமும் பிரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய ஆதார் அட்டையிலும் வாக்காளர் அடையாள அட்டையிலும் என் அப்பா பெயர் நல்லு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அய்யம்பரம் என்ற நல்லகுரும்பன் என குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணங்களில் நல்லு என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் ˙ நான் கூறுவது போன்று இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் அப்பா பெயரிலும் அய்யாவு பெயரிலும் பட்டா மற்றும் கிராம கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருந்தது என்று கூறியுள்ளேன். அதில் அதன் பட்டா எண் தெரியாது. எந்த ஆண்டில் ஏற்பட்டது என்றும் தெரியாது. நாங்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்கள். நான் கூறுவது போன்று என் அப்பா பெயர் அய்யம்பரம் என்ற நல்லகுரும்பன் இல்லை என்றும் அது தேவர் இனத்தைச் சேர்ந்த ஒரு நபரின் பெயர் என்றும் அவருக்குத்தான் இந்த சொத்து ஆதியில் பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. அவர் பெயரில் தான் கிராம கணக்குகுளில் பதிவுகள் இருந்தது என்றால் அதுஎனக்கு தெரியாது. என் தாத்தா காலத்தில் இருந்து நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். என் அப்பாவிற்கு 2 மனைவிகள். மூத்த மனைவி பெயர் செல்லம்மாள். 2வது மனைவி பெயர் பூச்சம்மாள். என் அப்பாவிற்கு 76.5 செண்டிடைத் தவிர வேறு சொத்துக்கள் ஊரில் இல்லை என்றால் சரியல்ல. உள்ளது. அந்த சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள். அதன் புலஎண் தெரியாது. பட்டா எண் தெரியாது. நாங்கள் முதல்தாரத்து மக்கள். எங்களுக்கு வழக்கு சொத்தை கொடுத்துவிட்டார்கள். இளையதாரத்து மக்களுக்கு ஊருக்கு வடக்கேயுள்ள சொத்தினை கொடுத்துவிட்டார்கள். என்னுடைய அம்மா என் அப்பாவின் முதல்மனைவி இல்லை

என்றும் 6 முதல் 9 வரையுள்ள பிரதிவாதிகளின் தாயார் பூச்சம்மாள் தான் முதல்மனைவி என்றும் சொன்னால் சரியல்ல. 76.5 செண்டில் எனக்கும் என் தம்பி மச்சக்காளைக்கும் பாத்தியம். அதில் கிழக்குப்பாகம் எனக்கும் மேற்குப்பாகம் மச்சக்காளைக்கும் ஒதுக்கப்பட்டது. நாங்கள் பிரிக்கும்போது மச்சக்காளை காலமாகிவிட்டார். அவர் இறந்து 12 ஆண்டுகளாகியுள்ளது. என் அப்பா என் தம்பி இறந்த பிறகுதான் இறந்தார். 6 முதல் 9 பிரதிவாதிகள் தாங்கள் தான் முதல்மனைவியின் வாரிசுகள் என்று கூறி பட்டாவில் தங்கள் பெயரை சேர்க்கச் சொல்லி கோட்டாட்சியரிடம் மனு செய்தார்கள் என்றால் சரிதான். அதில் என் தகப்பனார் பெயரும் 6 முதல் 9 பிரதிவாதிகளின் தகப்பனார் பெயரும் அய்யம்பிடுக்கி என்ற நல்லகுரும்பன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தமிழசன். நல்லு மற்றும் கூலு ஆகியோருடைய சொத்தினை 6, 7 ஆண்டுகளுக்கு முன்பு வாங்கியுள்ளார். அய்யாவு எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்த பிறகுதான் தமிழரசன் கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. அதற்கு முன்பே வாங்கிவிட்டார். நல்லு மற்றும் கூலு ஆகியோருக்கு கிரையம் கொடுக்க உரிமையில்லை என்றும் தமிழரசன் உரிமையில்லாத நபரிடம் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. எங்கள் பெயரை பட்டாவில் வழக்கிற்கு பிறகு நாங்களாக சேர்த்துக் கொண்டோம் என்றும் அது செல்லாது என்றும் சொன்னால் சரியல்ல. வாதி, அய்யம்பரம் என்ற பரதேசி நல்லகுரும்பன் என்ற தேவர் இனத்தைச் சார்ந்தவரிடம் வீட்டு வேலை பார்த்து வந்தார் என்றும் அவருக்கு வாரிசு இல்லாததால் வாதியிடம் வழக்கு சொத்தினை ரூ 900க்கு வாய்மொழியாக கிரையம் கொடுத்துவிட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. அதனால்தான் அடிப்படை கணினி சிட்டாவில் வாதியின் பெயர் மட்டும் இருந்தது என்றும் எங்கள் பெயர் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி தவம் கூலு என்பரின் மகள் ஆவார். 23.4.2010ம் தேதி வாதியின் வீடும் எனது தம்பி மகன் முனியாண்டியின் வீடும் தீயில் எரிந்து விட்டது என்றால் சரிதான். அவ்வாறு தீயில் எரியும்போது வழக்கு சொத்து குறித்த வாதியிடமிருந்த ஆவணங்களும் தீயில் எரிந்து விட்டது என்றும் சொன்னால் சரியல்ல. அதனை பயன்படுத்தி என் தகப்பனார் பெயர் நல்லு என்பதை மாற்றி அய்யம்பரம் என்ற நல்லகுரும்பன் என்று கூறி வழக்கு சொத்தினை அபகரிக்க முயற்சிக்கிறோம் என்றால் சரியல்ல. வாதி எங்க்ள் மீது நில அபகரிப்பு புகார் கொடுத்து மதுரை 1வது நீதித்துறை நடுவ ர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கும் எங்களுக்கும் எந்தவித பாத்தியமும் இல்லை என்றும் வழக்கு சொத்து வாதிக்கு மட்டும்தான்

பாத்தியம் என்றும் சொன்னால் சரியல்ல.

(குறுக்குவிசாரணைதொடர்ச்சிவாதிவழக்கறிஞர் வேண்டுகோள்படிஒத்திவைக்கப்படுகிறது)

Sd./ Nagamuthu

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.

/Sd.. M. Udhayavelavan,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.